# யாழ். நகரில் இருந்து கொழும்பு சென்ற பல தமிழர் வவுனியா அகதி முகாமில்

இலங்கை அரசின் அகதி முகாம் அமைக்கும் திட்டப்படி வவுனியாவில் தமிழ் அகதிகளை பலாத்காரமாக தங்க வைப்பதில் இராணுவம் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி பல தமிழர்கள் இங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர். வவுனியா பகுதியில் உள்ளவர்களும் இங்கு தங்குமாறும் அல்லது நிவாரண உதவிகள் நிறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதே போல கடந்த ஐந்து நாட்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா ஊடாக கொழும்புக்கு பயணமான பல தமிழர்கள் இராணுவத்தினரால் இங்கு அழைத்துவரப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா அண்மையில் கருத்து தெரிவிக்கையில் அகதிகள் என்று தமிழர்கள் கொழும்புக்கு செல்வதைத் தவிர்க்கவே அகதிமுகாம் அமைக்கப்படுவதாக கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.


பக்கங்கள் நான்கு விலை ரூபா:-3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 224 செவ்வாய் 25-09-1990 (புரட்டாதி 09) ற.அவ்வல் 05


# திருமலை தமிழ் அரச ஊழியர் வேலையை இழக்கும் அபாயம்

திருகோணமலைக்கு செல்ல முடியாதுள்ள தமிழ் அரசஊழியர்கள் வேலையை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் இவர்களின் இடங்களுக்கு பெரும்பான்மை இனத்தவர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமலை திரும்ப முடியாது யாழ். மாவட்டத்தில் நிற்கும் திருமலை செயலகத்தையும், ஏனைய திணைக்களங்களையும் சேர்ந்த சுமார் 400 க்கும் மேற்பட்ட அரச ஊழியர்களில் பலர் தமது வேலையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் திருமலை செல்ல தமக்கு போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தித்தருமாறு யாழ். அரச அதிபருடனும் செஞ்சிலுவைச் சங்கத்திடமும் கோரிக்கை விட்டும், பாதுகாப்பு அமைச்சிலிருந்து அனுமதி இதுவரை கிடைக்கவில்லை.

சகல திருமலையைச்சேர்ந்த அரச ஊழியர்களையும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். கச்சேரி ஊழியர்களை வேலைக்கு வருமாறு அழைப்பு

யாழ். செயலகத்தைச் சேர்ந்த சமூக சேவைப்பகுதி, உணவுக் கட்டுப்பாட்டு பிரிவு, கணக்குப் பிரிவு, ஓய்வூதியப் பிரிவு உட்பட சகல அத்தியாவசிய சேவைகளையும் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள் வேலைக்குச் சமூகமளிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்.

பொதுமக்கள் சம்பந்தமான பல அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதனாலேயே இவர்களின் வரவு அவசியமாகின்

... 04 ஆம் பக்கம் பார்க்க

## மொஸாட் இராணுவப் பயிற்சி அரசு விசாரிக்குமாம்

இஸ்ரேலிய உளவு நிறுவனமான மொஸாட் தமிழ் தீவிரவாதிகளுக்கு ராணுவ பயிற்சி அளித்ததாக வெளிவந்த செய்திகளை அரசு விசாரித்துவருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மொஸாட் உளவாளி ஒருவரினால் அண்மையில் எழுதப்பட்ட ''மொஸாட் உளவாளியின் உருவாக்கம்'' என்ற புத்தகத்திலேயே இவ்விடயம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## முத்திரைச்சந்தியில் நேற்று பொம்மர் தாக்கு; ஒருவர் பலி

யாழ். நகர் மீது நேற்று பிற்பகல் 2மணிக்கு பொம்மர்கள் தாக்குதல் நடாத்தின. முத்திரைச்சந்தியில் இடம்பெற்ற இத்தாக்குதலில் 'சாமுவேல் அன் சன்ஸ்' நிறுவனக் கட்டிடம் முற்றாகச் சேதமடைந்தது.

இதில் கந்தர் கருணாநிதி (34) பலத்த காயமடைந்து மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்படும் போது உயிரிழந்தார்.

க. உதயகுமார் (22) வவுனியா, கே. தேவராஜா (37)

— 04 ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் ஊர்காவற்படை மீது புலிகள் தாக்கு: இருவர் பலி

கடந்த வெள்ளி திருகோணமலை மாவட்டம் பாதுக்காவ பகுதியில் சிங்கள ஊர்காவற்படை மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இரு ஊர்காவற் படையினர் ஸ்தலத்திலேயே பலியானார்கள் இவர்களிடம் இருந்து இரு ரைபிள்களும் அதற்குரிய இருபது தோட்டாக்களும் புலிகளினால்கைப்பற்றப்பட்டன து

## வந்தாறுமூலையில் தாக்குதல்

வந்தாறுமூலையில் ரோந்து சென்ற ராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் திடீர் என தாக்குதலை மேற்கொண்டதில் இரு சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இதே சமயம் கடந்த சனிக்கிழமை வேலணைப்பகுதியில் நடைபெற்ற மோதலில் சில இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டமையை நேற்று பாதுகாப்பு அமைச்சு ஒப்புக்கொண்டுள்ளது. து

## மணலாற்றில் தாக்குதல் இரு சிப்பாய்கள் பலி

நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் மணலாறுப்பகுதியில் (வெலிஓயா) உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த ராணுவம் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டதில் இரு சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட சிப்பாய்களிடம் இருந்து ரி-81 துப்பாக்கி ஒன்று, ரி-56துப்பாக்கி ஒன்று, ரவைகூடு-11, 105 ரவைகள், தலைகவசங்கள்-2 இரு கோல்ஸர்கள் என்பன புலிகளால் மீட்கப்பட்டன. இச்சம்பவத்தை ராணுவ வட்டாரங்களும் நேற்று ஊர்ஜிதம் செய்தன. து

## மட்டக்களப்பில் ராணுவம் மீது புலிகளின் தாக்குதல் அதிகரிப்பு

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ொம்மாந்துறையில் இருந்து ஏறாவூர் பகுதிக்கு சென்று கொண்டிருந்த ராணுவம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

செங்கலடியில்ராணுவத்தை வழிமறித்து புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலினால் ராணுவம் முகாமிற்கு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மண்கும்பானில் பல இளைஞர் இராணுவத்தால் கைது

மண்டைதீவுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து நேற்று முன்தினம் மண்கும்பான் பகுதியில் உள்ள பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

ராணுவம் பெண்கள் மீது சேஷ்டைகள் புரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து அப்பகுதி மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர், 68-து

## சென். பற்றிக்ஸ் கல்லூரி தொடர்ந்து தாக்கப்படுகிறது

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி தொடர்ந்தும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களினால் தாக்கப்பட்டு வருகிறது.

இதனால் இங்கு இருந்த அகதிகளில் ஒரு பகுதியினர் வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். ஒரு சிலர் பல சிரமங்களின் மத்தியில் தங்கியுள்ளனர்.

இக்கல்லூரியின் மூன்று மாடிக் கட்டிடம் பலத்த சேதமடைந்துள்ளது. வகுப்பறைகள், கூரைகள் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன.

தேவாலயம், விளையாட்டு மைதானம் என்பன மண்டைதீவுஷெல் தாக்குதலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

(ப 17 ரு)

## வங்கி இடமாற்றம்

ஹற்றன் நாஷனல் வங்கியும் யாழ். பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதிக்கு மாற்றப்படவிருக்கின்றது.

இவ்வங்கியின் உடைமைகளை யாழ். நகரப்பகுதியில்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கடந்த வெள்ளியன்று நடைபெற்ற கண்டக்காடு தாக்குதலில் ராணுவ அதிகாரி பலி

கடந்த வெள்ளியன்று மட்டக்களப்பு கண்டக்காடு பகுதியில் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்ட பத்து ராணுவசிப்பாய்களும் ராணுவ பொறியியற் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது,

இவர்கள் வீதிரோந்து மேற்கொண்ட சமயமே தாக்கப்பட்டதாகவும், இப்படையணிக்கு தலைமைதாங்கிய ராணுவ அதிகாரி சார்ஜண்ட் பி. எச். சுகுந்தவும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டதாகவும் கொழும்பில் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(து)

## நாளை திலீபனின் நினைவு நாள்

தியாகி திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவையொட்டி குடாநாடு எங்கும் நாளை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சந்திகள், வீதிகள் தோறும் திலீபனின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்டு புரட்சிக் கீதங்களும் ஒலிபரப்பப்படுகின்றன சில இடங்களில் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்று வருகின்றது.

சுதுமலை அம்மன் ஆலயம், பண்டத்தரிப்புச் சந்தை, முத்திரச்சந்தி, தெல்லிப்பழை கும்பிளாவலை, புத்தூர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## விலை நிர்ணயம்

துணுக்காய் மல்லாவிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நெல், அரிசிக்குரிய விலையினை நிர்ணயித்துள்ளனர்.

இதன்படி துணுக்காயில் ஒரு கிலோ அரிசி ரூபா 18.50 ஆகவும், ஒரு மூடை நெல் ரூபா 650 ஆகவும், கிளிநொச்சியில் அரிசி ரூபா 19.50 ஆகவும், நெல் ரூபா 700 ஆகவும் விற்கப்படுகிறது.

துணுக்காய் பகுதியில் மண்ணெண்ணெய் லீற்றர் ரூபா 51 ஆகவும், டீசல் லீற்றர் ரூபா 95 ஆகவும், பெற்றோல் ரூபா 200 ஆகவும்] விற்கப்படுகிறது.

(ப-6, 38கி)

## சிறுவிளம்பரம்


### புத்தகம்

குடும்ப ஜோதிடம், நீங்கள் ஜோதிடம் கற்றுக்கொள்ளவும், ஜாதகம் கணிக்கவும், வி ாகப் பொருத்தம் பார்க்கவும் சுபமுகூர்த் தங்களுக்கு நாட்கள் குறிப்பிடவும், பலன்கள் காணவும் உபயோகமான பல அரிய விஷயங்கள் அடங்கிய துணைவன் விலை 45/- விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். 09041

### தேவை

தமிழ்தட்டச்சு இயந்திரம்

கொண்டு செல்லக்கூடிய, கையடக்கமான (PORTABLE) தமிழ் தட்டச்சு இயந்திரம் நல்ல நிலையில் உள்ளது. உடன் தேவை. கல்வியங்காடு டச்சு வீதியிலுள்ள முரசொலி காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர். 09081


## விபரம் தர கோரிக்கை

ஐக்கியநாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலய உதவியுடன் நடைபெறும் முறைசாராக்கல்வி தொழிற்திறன் பயிற்சித் திட்டத்துக்கென வழங்கப்பட்ட கருவி உபகரணங்கள், தொழிற் கூடங்கள் போன்றவற்றிற்கு அண்மைக் கால அசம்பாவிதங்களினால் சேதம் ஏதும் ஏற்பட்டிருப்பின் அதுபற்றிய விபரமான அறிக்கையொன்றினை எல்லா அதிபர்களும் 27-ம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் முறைசாராக் கல்விப்பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இப்பிரிவின் கொள்வனவுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் செலவு விபரத்தையும் உடன் அனுப்பி வைக்குமாறு அதிபர்கள் கேட்கப்படுகின்றனர். இதன்பொருட்டு உரிய போதனாசிரியர்கள் தமது அதிபரைச்சந்தித்து உரிய தகவல்களை வழங்கியுதவும்படியும் யாழ். தொழில்நுட்பக் கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(9 கி)

## இன்று

இன்று 25-ம் திகதிசெவ்வாய் மாலை 6.00 மணியளவில் பொன்னாலை கிருஷ்ணன் கோயிலிலிருந்து தியாகி திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி ஊர்வலமாக வட்டுப்பிரதேச சிற்றூர் அவைகளின் பிரதான வீதியூடாக எடுத்து வரப்பட்டு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை சென்றடையும்.

26-ம் திகதி மாலை 4மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தியாகி திலீபனின் 3-ம் ஆண்டு நினைவாஞ்சலிக் கூட்டம் நடைபெறும். வட்டுப்பிரதேச பொறுப்பாளர் ஐயர் உட்பட விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் இங்கு உரையாற்றுவார்கள். (கி)

★ புதிய சட்டத்தை எதிர்த்து இதுவரை 38 மாணவர் தற்கொலை;

# மாணவர் தற்கொலைப்போராட்டம்;

# இந்திய அரசுக்கு பெரும் நெருக்கடி

மாணவர்களின் திடீர் 'தற்கொலை' கிளர்ச்சி இந்திய மத்திய அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய மத்திய அரசு புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள சட்டத் திருத்தமொன்றின்படி இந்தியாவில் அரச தொழில்வாய்ப்பில் தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கு 25 சதவீத இடம் ஒதுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தச் சட்டத்திருத்தத்தை உயர்சாதி இந்துக்கள் பலமாக எதிர்த்து வருகின்றனர். இப்புதிய சலுகை முறை உடனடியாகக் கைவிடப்பட வேண்டுமென அவர்கள் வலியுறுத்தி வந்தனர்.

இவர்களின் இக்கோரிக்கையை தான் ஏற்கப்போவதில்லையெனவும், இப்புதிய திட்டம் மாற்றப்பட மாட்டாது அமுல் செய்யப்படுமெனவும் பிரதமர் வி. பி. சிங் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து உயர்சாதி இந்து மாணவர்கள் புதிதாக தற்கொலைப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆகஸ்ட் 7-ம் திகதிக்குப்பின்னர் இச்சட்டத்தை எதிர்த்து 38 மாணவர்கள் இதுவரை தற்கொலை செய்திருக்கிறார்கள்.

இந்த மாணவர் தற்கொலைப் போராட்டத்தினால் இந்திய மத்திய அரசு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது.

இதனால் மத்திய அரசு ஆட்டம் காணும் நிலை உருவாகலாமெனவும் அவதானிகள் கருதுகிறார்கள். (கி)

## சின்னத்தம்பி சுவாமி குருபூசை

நாவற்குழி கலையாபரணங் கோட்டையில் அமைந்திருக்கும்சுத்த சிவசமரசசன்மார்க்க சாது சங்க சமாதி குருபீட ஆச்சிரமத்தில் நடுநாயகமாக விளங்கும் சின்னத்தம்பி சுவாமியின் குருபூசை 29-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## தியாகி திலீபன் அஞ்சலிக் கூட்டம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சாவகச்சேரி பிரதேச கிளையின், தியாகி திலீபனின் அஞ்சலிக் கூட்டம் 26-ந் திகதி மாலை 5 மணிக்கு மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. (ப5கி)

புலிகள் கோரிக்கை:

## அஞ்சலி அலங்கரிப்புகளுக்காக மரங்களைத் தறிக்காதீர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரமரணங்களுக்கு அஞ்சலி செலுத்தும் போதும், தியாகிகளை நினைவு கூரும் போதும் பச்சை மரங்களை வெட்டி அலங்கரித்தலும் தென்னோலைக் குருத்துகள், வாழைமரங்கள் தென்னை, பனைகளை வெட்டி நாட்டுதலையும் விலக்குமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை கேட்டுள்ளார்.

எமது இயக்க வீரர்கள் ஒவ்வொரு நாளும் வீரமரணங்களைத் தழுவுதல் இன்றுநடைமுறையாகிவிட்டது உயிர் மரங்களை அழிப்பதாலும், அவற்றின் உறுப்புகளைக் குறைப்பதாலும் எமது மண்ணின் இயற்கை வளம் அழிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது இதைத்தடுப்பதற்கு மக்கள் முன்வந்து எதிர்காலத்தில் கொடிகள் 'பானர்கள்', தீட்டிய உருவங்கள் மூலம் மட்டுமே அஞ்சலிகளைச்செலுத்த பயன் படுத்துமாறு அன்போடு கேட்பதாகவும் இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (கி

## கிளிநொச்சியில் தபால் சேவை இன்னும் இல்லை

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நான்கு மாதங்களாக கடிதங்கள் எதுவும் வந்து சேரவில்லை.

கொழும்பிலிருந்து கப்பல் மூலமாக வந்த கடிதங்களில் யாழ். மாவட்டத்திற்கு உரியவை மட்டுமே இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளன.

(ப-6 கி)

# 3-வது ஆண்டு நினைவஞ்சலி

## தியாக தீபம் திலீபனுக்கு எமது அஞ்சலி



அன்னை மடியில்: 29 - 11 - 1963

சத்தியத்தின் வழியில்: 26 - 09 - 1987

உச்சமான நோன்பினுக் கேயுன்னை
உட்ப டுத்திய ஓர்மத்துக் கேதிணை!
நிச்சயம் ஈழ மக்கள் நெஞ் சங்களில்
நிற்பன், நிற்பன், திலீபனே நிற்பனாம்!

''எங்கள் மக்களைக் காத்திட ஆயுதம்
ஏந்து வேன்நான் மீளவும்!'' என்னும் உன்
சங்க நாதம் செவிகளில் கேட்குதே!
சாவுனக்கில்லை, தம்பி திலீபனே!

தாய கத்தினை மீட்கும் முரசெலாம்
தம்பி உன்பெயர் சொல்லி முழங்குமாம்!
ஞாயி றாய்ஒளி வீசு! ஈழமாமணி
நாட்டின் வெற்றிக் கொடியினில் நில்லடா!

சாவகச்சேரி நகர் சிற்றூரவை
சாவகச்சேரி வடக்கு சிற்றூரவை
கோயிற்குடியிருப்பு சிற்றூரவை
சங்கத்தானை சிற்றூரவை
கல்வயல் சிற்றூரவை
மீசாலை தெற்கு சிற்றூரவை

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
சாவகச்சேரி நகர் பிரதேசம்

09079

இந்நாள் இம்மாதம் 1987ஆம் ஆண்டு - முரசொலி தந்த சிறப்புச் செய்திகள்

## திலீபனின் மனோநிலை பாதிக்கப்பட்டது

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப்பொறுப்பாளர் திலீபன் நீராகாரம் எதுவும் அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்த பத்தாவது நாளை நேற்று நிறைவு செய்து கொண்டார்.

நேற்று அவரது உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு காணப்பட்டது. திலீபனின் உடல் பருமன் பெருமளவு குறைந்து காணப்பட்டது., கடந்தசில தினங்களாக திலீபன் மனோநிலை பாதிக்கப்பட்டவராகக் காணப்படுகிறார். ஞாபகசக்தி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

## திலீபனுக்கு ஏதாவது நேரின் இந்தியாவேபொறுப்பு

திலீபன் என்பவன் சாதாரணமான ஒரு மனிதனல்ல. உரிமை வேண்டிப் போராடும் ஒரு சிறுபான்மை இனத்தின் ஏகபோக விடுதலைச் சின்னம் திலீபன்.

தனிநாடு வழங்குமாறோ, ஆயுதங்களைத் திருப்பித்தருமாறோ திலீபன் இங்கு கேட்கவில்லை.

போராளிகள் மரணத்தைத் துச்சமாக மதிப்பவர்கள். களத்தில் மரணிப்பதையே வீரமெனக் கருதுபவர்கள் அவர்கள்.

உண்ணாவிரதம்கூட ஒரு போராட்டக்களம் தான். கழுத்தில் கட்டிய குப்பிக்கு வேலைகொடுக்காது சாத்வீக வழியில் தனது கோரிக்கைகளை முன்வைத்தே திலீபன் போராட்டம் நடாத்துகிறான். (கி)

(25. 09. 87 இதயநாதத்திலிருந்து)

★ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குப் பறந்து செலல

# கொழும்பில் தூதரகங்களின்முன் தமிழ் இளைஞர்கள் முண்டியடிப்பு

வடக்கு,கிழக்குநிலைமையை யடுத்து பல தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பிறநாடுகளுக்குப் பறப்பதற்காக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்குப் படையெடுத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதராலயத்தின் முன்னால் தினமும் பெருமளவு தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் கூட்டமாகக் காணமுடிவதாக எமது நிருபர் அறிவிக்கிறார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து ஏதோ ஒருவிதமாகக் கொழும்பைச் சென்றடையும் இவர்கள் தற்போதைய நிலையைக் காரணம் காட்டிக் கிடைக்கும் சலுகைகளைப் பயன்படுத்தி இவர்கள் வெளிநாடுகளுக்குப் பறப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே விஸா கிடைக்கப்பெற்ற நிலையில் தமது பயணங்களை ஒத்திவைத்தவர்களும் தற்போதைய சூழ்நிலையில் தமது முடிவை மாற்றி வெளிநாடுகளுக்குச் செல்லும் முயற்சியில் இறங்கியுள்ளனராம்.

இது தவிர மற்றொரு தொகுதியினர் இந்தியாவுக்கு நாட்டுப்படகுகளின் மூலம் சென்று அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கி)

### யாழ். அகதிகளுக்கு நிவாரணம் இல்லை

துணுக்காய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் இருக்கும் யாழ்ப்பாண மாவட்ட அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.

நிவாரணம் வழங்குவதற்கு போதிய நிதி இல்லாததே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது,

இப்பகுதியில் பிச்சைப்பணம் பெறுபவர்களுக்கும் பணம் வழங்கப்படவல்லை. உணவு முத்திரைக்கு உரிய உணவுப் பொருட்கள் வழங்குவதில் கஷ்டம் ஏற்படுவதால் நெல், அரிசி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது(38கி)

தென்பகுதியிலிருந்து

### இடம்பெயர்ந்த ஊழியர் வேலையிழக்கும் நிலையில்

வடக்குக் கிழக்கு அல்லாத சிங்களப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்த அரச ஊழியர்கள் ஏதும் செய்வதறியாத நிலையில் உள்ளார்கள்.

இவர்களை உடனடியாக வேலைக்குத் திரும்புமாறு சிவப்பு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தினத்திற்குப் பிந்தாமல் வருமாறும், அன்றேல் வேலையை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் எனவும் அச்சுறுத்தப்படுகிறது. உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் கடமைக்குத் திரும்ப முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர்.

இவர்களில் பலர் சம்பள முற்பணம் ஏதும் இன்றிகஷ்ட நிலையில் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (17 கி)

### இந்தியப்படகுமீது ஹெலி சூடு

துணுக்காய் இலுப்பைக்குளம் இரணைதீவுப் பகுதியில் அகதிகளுடன் சென்ற இந்திய மீனவப் படகுமீது ஹெலியில் இருந்து ஷெல், துப்பாக்கிச்சூடுகள் நடாத்தப்பட்டது. (38 கி)

தொடர் காவியம்

அங்கம்: 11

## தியாகத் திலீபம்

— மு. வே. யோ. வாஞ்சிநாதன்

தமிழ் இனத்துக்காக உண்ணாவிரதம் இருந்து தன் இன்னுயிர் தந்த மாபெரும் தியாகி அமரர் திலீபன் அவர்கள். அன்னாரது உண்ணா நோன்பின் பதினொராம் புனித நாளின் நினைவு இந்நாள்.

தியாகச் சுடராம் திலீபன் நினைவைப் போற்றி அன்னாருக்கு அஞ்சலி செலுத்து முகமாக இத்தொடர் காவியத்தை வெளியிடுகிறோம்.

பல்கலைக் கழகப் படிப்புக்குத் தன்னுடல்
நல்லதோர் பயனாய் இருந்திட விரும்பிச்
சொல்லிய திலீபனின் சொற்படி அவனுடல்
வல்லோர் தலைமையில் வழங்கப் பட்டது!

செத்தபின் கூடத் தன்னுடல் மக்களின்
சொத்தென விட்டுச் சென்றவன் திலீபன்!
இத்தனை பெரிய மனிதனிங் கில்லையே?
எத்தனை பெரிய இழப்பிது தமிழுக்கு?

தியாகத்தின் தீபம் தென்றலில் கலந்ததால்
தாயகப் பூமி தவியாய்த் தவித்தது!
நாயகன் பிரிவால் நம்மண் நலிந்தது!
தூயநற் புலிகள் துடித்தனர்... கதறினர்!

எத்தனை ஆயிரம் கனவுடன் இருந்தவன் ..
இத்தரை சுதந்திரம் அடைந்திடும் நாளை ..
காத்துக் கிடப்பான் விண்ணிலே... . ஓர் நாள்
பூத்துக் குலுங்கும் பூந்தமிழ் ஆட்சி!

(வளரும்)

## இக்கடிதங்கள் உங்களுடையதா?

வெளிநாடுகளிலிருந்தும், பிறமாவட்டங்களிலிருந்தும் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பப்பட்ட சில முக்கிய கடிதங்களும், உறவினர்களால் அனுப்பப்பட்ட தேடுதல் கடிதங்கள் சிலவும் மானிப்பாயில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் உரியவர்களின் வருகைக்காக வைக்கப்பட்டுள்ளன.

கீழே குறிப்பிட்ட முகவரியாளர்களுக்குரிய கடிதங்கள் சிலவும் அங்கு வைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அவற்றை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் விபரம் வருமாறு.-

மானிப்பாய்:-கனகரத்தினம் சரஸ்வதி சுதுமலை, க பரமானந்தம் கட்டுடை, ராஜதேவி திருநாவுக்கரசு ஆனந்த வீதி, எஸ். பாலசிங்கம் கட்டுடை, பத்மினி சின்னத்தம்பி சுதுமலை வடக்கு, எஸ். சிவானந்தன் வசந்தி லோட்டன்றோட், சுப்பையா முருகேசுப்பிள்ளை சுதுமலை மேற்கு, கிருஸ்ணதேவி ஆஸ்பத்திரி வீதி, சந்திரன் புஸ்பராணி யாழ் றோட், சிவபாதம் புவனராணி சுதுமலை வடக்கு, குகநாதன் சுதுமலை தெற்கு, பரமநாதன் கட்டுடை,

ஆனைக்கோட்டை:- ஆர். ரவி சாந்தகுமார், தம்பிராசா பொன்னம்பலம், ரட்ணதுரை நந்தாவதி, தம்பிமுத்து சுந்தரலிங்கம்,

யாழ்ப்பாணம்:- என். எஸ் அகமட், மானிப்பாய் றோட் பி. சுசீலா செம்மணி றோட்

(தொடரும்)


திலீபனின்
மூன்றாம் ஆண்டு
நினைவாக
எமது இதய அஞ்சலி



மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்
- தியாகி திலீபன்

பளை வர்த்தகர் சங்கம்.

பச்சிலைப்பள்ளி
சிற்றூர் அவைகள்
வட்ட அவை - பளை.

09082 09083

### நவராத்திரிச் சிந்தனை - 7

## வாணி திருவடியை வணங்குகிறான் ஒரு கவிஞன்

வெற்றி பெறுவோர் விழைவதுவும் செல்வங்கள்
பற்றி நினைவோர் பணிவதுவும் - கற்றவர்கொண்
டாடுவதும் சங்கீதம் ஆடல் முதற்கலைகள்
ஊடு பயின்றிவ் வுலகெல்லாம் - ஈடில்லாப்
பூசனைகள் செய்யும் புனித உள்ளத்தவர்கள்
நேசமுற என்றும் நினைப்பதுவும் - ஆசுகவி
கம்பன் அழைக்கக் கடுகி நடந்ததுவும்
நம்பும் அபிராமிப் பட்டரது - கண்களிப்ப
ஆனந்த மாக நடம் ஆடி அவருளமாம்
வானந் திகழும் மதியமும் - ஞானம்வளர்
சாலை, தொழிற்கூடம், தக்கோர் அவை இன்னும்
மூலை முடுக்கிலுள கோயிலெலாம் - நாளும்
உலவுவதும் இந்த உலக மதங்கள் தொறும்
நிலவுவதும் அடியேன் நெஞ்சில் - பலகாலம்
தீட்டும் உயிரோ வியமாய்த் திகழ்ந்தெனது
பாட்டின் பொருளாய் நான் பாடுங்கால் - கேட்டுருகி
தாளம் இடுவதுவும் சந்தங்கள் தந்திந்த
ஈழம் முழுவதிலும் என்கவிதை - மூளவொரு
காரணமும் அன்னை கலைவாணி தன் சிவந்த
ஆரணங்கள் காணா அடி!

## அரச ஊழியரின் சம்பளத்தை பணமாக வழங்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் பணப் புழக்கம் குறித்து திணைக்கள அதிகாரிகள் யாழ். அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

நேற்று அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற உயர் அதிகாரிகள் மாநாட்டில் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்து திணைக்களங்களுக்கு தேவையான பணம் குறித்த விபரங்களை சேகரித்து கொழும்புக்கு அனுப்பி பணத்தைப் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதென இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேபோல ஓய்வூதியம் பெறுவோரின் நிலைமைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. அவர்கள் மூன்று மாதமாக ஓய்வூதியம் பெறவில்லை எனவும், நிவாரணப் பங்கீடு பெறவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இவர்களுக்குப்பணமாக ஓய்வூதியம் வழங்குவதற்கு தாம் துரித நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் இங்கு தெரிவித்தார், 66.ரு

## உணவு, நிவாரண விநியோகம் சீராக நடைபெற யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை

தற்போது நடைமுறையில் உள்ள நிவாரணம் மற்றும் பங்கீட்டு வேலைகளில் பல குறைபாடுகள் இருப்பதாக யாழ். அரசாங்க அதிபருக்குப் புகார்கள் கிடைத்துள்ளன.

இது குறித்து நேற்று அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்றஉயர் மட்ட மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது.

இக் குறைபாடுகளைப் போக்க அரச அதிகாரிகளின் பிரதி நிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கொண்ட ஐவர் குழுவொன்றும் அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டது.

உணவுப் பங்கீட்டு அட்டைகள் மூலம் சிலர் பல்வேறு இடங்களில் உணவுப் பொருட்களைப்பெற்று வருவது கண்டுபிடிக்கப்பட்டதனையடுத்து அதனைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சகல உணவுப் பங்கீட்டு அட்டைகளும் அந்தந்தப் பகுதி கிராம சேவகர்கள் மூலம் திரும்பப் பெறப்பட்டு உதவி அரசாங்க அதிபரால் அத்தாட்சிப் படுத்தப்படும்.

இதேவேளை உணவுப் பங்கீட்டு அட்டைகள் இனிமேல் உதவி அரசாங்க அதிபர்களாலேயே வழங்கப்படவுள்ளன. அதனால் கூட்டுறவுச் சங்கங்கள் தம்மிடம் உள்ள புதிய உணவு அட்டைகளை உதவி அரசாங்க அதிபர்களிடம் சமர்ப்பிக்கவேண்டும். (66 ரு)

## நிவாரண உணவு மோசடி கூட்டுறவு ஊழியர் பதவி நீக்கம்

கைதடி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளையில் நிவாரண உணவுப் பொருட்களில் மோசடி செய்த இரு பெண் முகாமையாளர்களும் ஒரு கொள்வனவு உத்தியோகத்தரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

இவர்கள் இந்த உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு வரும் போது அவற்றில் அரிசி, சீனி, லக்ஸ்பிறே, பருப்பு தீப்பெட்டி போன்றவற்றை இக்கிளைக்கு அருகில் இருக்கும் புடவைக் கடையில் மறைத்து வைத்தனராம்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (71 ரு)

## குடாநாட்டில் மழை

நேற்று பெய்த மழையினால் குடாநாட்டில் விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியும் ஆரவாரமும் ஏற்பட்டது.

இங்குள்ள வயல்கள் மாடுகளால் உழுது பண்படுத்தப் படுவதையும் காண முடிந்தது

இதனால் நேற்று மண்ணெண்ணெய் ஒரு போத்தல் 25 ரூபா முதல் 30 ரூபா வரை குறைந்துள்ளது. (33ரு)

### ஊர்காவற்படையைக் கலைக்க கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள முஸ்லிம் ஊர்காவற்படை அமைப்பை கலைத்து விடுமாறு கொழும்பில் ஆறு தமிழ் அரசியல் கட்சிகள் அரசிடம் கேட்டுள்ளன.

முஸ்லிம் ஊர்காவற் படையினரால் தமிழ் மக்களின் உயிருக்கு பாதுகாப்பில்லை எனவும் இக்குழுக்கள் தெரிவித்துள்ளன. (து)

## வட கிழக்கு அரச ஊழியருக்கு கஷ்ட நிவாரண ஊக்குவிப்பு நிதி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கான கஷ்ட நிவாரண ஊக்குவிப்புப் பணம் வழங்குவது தொடர்பான சுற்று நிருபம் யாழ் செயலகத்திற்கு கிடைத்துள்ளது.

இதன்படி ஊழியர் ஒருவர் தனது சம்பளத்தின் 50 வீதத்தை அல்லது 500 ரூபாவை, இதில் எது கூடிய தொகையோ அதனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஜூன் மாதத்தில் இருந்து மூன்று மாத காலப்பகுதிக்கு வழங்கப்படவிருக்கும் இந் நிவாரணம் அரச ஊழியர்கள் வேலைக்கு சமூகமளித்தமைக்கான அத்தாட்சியை அவ்வப்பகுதி திணைக்களங்கள் உறுதிப்படுத்தப்படுமிடத்தே வழங்கப்படுமென யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (66 ரு)

## நோயாளிகளுக்கு தினமும் உணவு வழங்க நடவடிக்கை

மானிப்பாயில் இயங்கும் யாழ்.போதனா வைத்திய சாலையில் உள்ள நோயாளிகளுக்கு தினசரி மூன்று நேரம் உணவு வழங்குவதற்கு யாழ் மாவட்ட உதவிஉணவுக் கட்டுப்பாட்டதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்குத் தேவையான பொருட்களை வழங்கவும் அவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்[illegible] மாதாந்தம் 12 மூடை மா, 12 மூடை அரிசி, 4 மூடை சீனி என்பனமானிப்பாய் பரிஷு பல.நோ.கூ. சங்கத்தின் மூலம் வழங்கப்படவுள்ளன. (ப 11 கி)

## சங்கானை அகதி முகாம்மீது இரவு நேரம் கல்வீச்சு

சங்கானை கலாசார மண்டபத்தில் அமைந்துள்ள அகதி முகாம் மீது இரவு நேரங்களில் இனம் தெரியாதவர்கள் கற்களை வீசுகின்றார்கள்.

இதனால் அங்கு தங்கியுள்ள அகதிகள் அவ்விடத்தைவிட்டு அங்கும் இங்கும் ஓடித்திரிகின்றனர். சிலர் மயிரிழையில் தப்பியதாகவும். தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேர கண்காணிப்புக் குழு இருந்தும் இச் சம்பவம் நடைபெறுவது குறித்து எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என அகதிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ப 21 கி)

## ஹெலி சூடு; நபர் படுகாயம்

ஹெலி சுட்டதினால் உதய நகரைச் சேர்ந்த பன்னிரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்லப்பன்பெருமாள் (வயது 60) படுகாயமடைந்து முரசுமோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் மாங்குளம் நயினமடு என்னும் இடத்தில் நிகழ்ந்துள்ளது

பிரஸ்தாப நபர் தனது பிள்ளைகளையும், மனைவியையும் கொழுபிற்கு அனுப்பச் சென்றபோதே இச்சம்பவம் நிகழ்ந்ததாம். (ப-6ஸ்ரீ)

### நாளை...

சோமஸ்கந்தா கல்லூரி, சுன்னாகம் ஐயனார் கோவிலடி ஆகிய இடங்களில் இன்று 25-ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

நாளை 26-ம் திகதி காலை 10.48 மணிக்கு சகல இந்து கிறிஸ்தவ ஆலயங்களிலும் முஸ்லிம் பள்ளிவாசல்களிலும் மணி அடித்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறும் திலீபன் நினைவு நாள் குழு அறிவித்துள்ளது.

கல்வியங்காட்டுச் சந்தியில் இருந்து முக்கிய வீதிகளூடாக நேற்றுமுன்தினம் அலங்கரிக்கப்பட்டதேரில் திலீபனின் திருவுருவப்படம் இழுத்து வரப்பட்டு மீண்டும் அதே இடத்தை வந்தடைந்தது. (ப11,71,33,53 கி ரு

### மட்டக்களப்பில்...

பின்வாங்கிச் சென்றது.

அதே சமயம் வந்தாறுமூலையில் உள்ள முகாமில் இருந்து புறப்பட்ட ராணுவம் மீதும் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலையடுத்துராணுவம் முகாம் திரும்பியது. து

### வங்கி...

இந்து மீட்டு வளாக விடுதிக்குக் கொண்டுவந்து சேர்ந்ததும் வங்கியின் செயற்பாடுகள் முழு அளவில் மேற்கொள்ளப்படும் என வங்கி முகாமையாளர் தெரிவித்தார். 66 கி

### யாழ்...

றது என யாழ், அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார், 66 ரு

### மொஸாட்...

குறிப்பிடப்பட்டுள்ளதாக அரசு அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. து

### முத்திரைச் சந்தியில்...

கல்வியங்காடு, எஸ். தங்கவடிவேல் (39) நல்லூர் ஆகியோர் காயமடைந்தனர்.

இதேபோல ஸ்ரான்லி கல்லூரிக்கு அண்மையில் நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் கே. சரஸ்வதி (60) என்ற பெண் காயமடைந்தார். இங்குள்ள சில வீடுகள் சேதமடைந்தன. ப 17, 33, 47, 70ரு

### திருமலை...

ஆகஸ்ட் மாதம் 1ம் திகதியிலிருந்து வேலைக்கு திரும்புமாறு அரசாங்கம் பணித்தது. அத்துடன் யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்ட சம்பள முற்பணத்தையும் இதே திகதியில் இருந்து வழங்கக்கூடாது என அறிவித்துள்ளது.

அத்துடன் யாழ். குடாநாட்டிலுள்ள உதவி அரச அதிபர் பணிமனைகளில் கையொப்பமிட்டு வந்த இந்த அரச ஊழியர்களை இம்மாதம் 3ம் திகதியிலில் இருந்து அவ்வாறு கையொப்பமிடுவதற்காக அனுமதி மறுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருமலைக்கு வேலைக்கு திரும்பாமைக்காக சிலருக்கு வேலைநீக்க கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. 66-ரு


## அரசாங்க அறிவித்தல்

### உணவுப் பங்கீட்டு விநியோகம்

பொது மக்களினதும், கிராம சேவையார்ளகளினதும் முக்கிய கவனத்துக்கு

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைகளை பெற்ற சகலரும் தத்தமது நிரந்தர வதிவிட கிராம சேவையாளரிடம் அவ்வட்டைகளைச் சமர்ப்பித்து அப்பிரிவு உதவி அரசாங்க அதிபரின் மேலொப்பத்தினைத் தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்படுகிறது. உதவி அரசாங்க அதிபரின் கையொப்பத்தினை உடைய பங்கீட்டு அட்டைகளுக்கு மட்டுமே உணவுப் பொருட்கள் பங்கீட்டு முறையில் 02-10-1990க்குப் பின்பு வழங்கப்படும். இந் நடைமுறையினை 02-10-1990க்கு முன்பாக நிறைவு செய்யுமாறு எல்லாக் கிராம சேவையாளர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அன்ரன் அல்பிரட்,
அரசாங்க அதிபர்,

யாழ். மாவட்டம்,
24.9.90

09085



## காலமானார்

### திருமதி பெலிசிற்றஸ் இம்மானுவேல்

(சில்லாலை)

திருமதி பெலிசிற்றஸ் இம்மானுவேல் காலமானார். இவர் நாரந்தனை காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை இம்மானுவேல் (இளைப்பாறிய தபாலதிபர், சிங்கப்பூர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருட்சகோதரி ஸ்ரனிஸ்லோஸ், காலஞ் சென்ற அருட் திரு. என். ஜோசவ், அ. ம. தி., காலஞ்சென்ற திருமதி. அக்னெஸ் இன்னாசித்தம்பி, திரு. என். பிரான்சிஸ் (மலேசியா), காலஞ்சென்ற திரு. என். ஜேம்ஸ் (இளைப்பாறிய அதிபர், புனித சூசையப்பர் ம. வி. மாதகல்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரது பூதவுடல் இன்று 25-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7-30 மணிக்கு சில்லாலை "ஜெயமன்றம்" இல்லத்திலிருந்து புனித கதிரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செலப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
சில்லாலை. டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார்

09080


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 25-09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.